# ஷன்யன் திபெத்தியர்கள் (Tibetans, Shanyan)




**வசிப்பிடம்:** சிசுவான் மாநிலத்தின் பையு (Baiyu) மாவட்டத்திலுள்ள தொடர்பற்ற ஷன்யன் தாலுகாவில், மிகக் குறைவாக அறியப்பட்ட, 20,000 ஷன்யன் திபெத்திய இன மக்கள் வாழ்கின்றார்கள். சீன அரசாங்கம் முக்கியத் திபெத்தியர்கள் மற்றும் ஷன்யன் திபெத்தியர்களை வேறுபடுத்தாவிட்டாலும் கி.பி.1990 ல் செய்யப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பையு மாவட்டத்தில் 39,543 மக்கள் வசித்தனர் அதில் 36,591 (92.5%) பேர் திபெத்தியர்களாவார்கள். இதில் பெரும்பாலானோர் ஷன்யன் திபெத்தியர்களாகும். ஷன்யன்னுடைய திபெத்திய பெயரின் பொருள் "கரடுமுரடான நிலப்பரப்பு" என்பதாகும். ஷன்யன் திபெத்தியர்களைச் சென்றடைய ஒருவர் சிசுவான் மாநிலத்தின் மேற்கு முனையில் உள்ள லீதாங்கைக் (Litang) கடந்து பாதங் (Batang) பகுதியைச் சென்றடையவேண்டும். இப்பிரயாணம் மாநில தலைநகரான சங்துவிலிருந்து (Chengdu) சில நாட்கள் எடுக்கும். சங்துவிலிருந்து பையுக்குப் பேருந்துகள் உள்ளன ஆனால் சாலை அடிக்கடி நிலச்சரிவு மற்றும் சாலை சரிதல் காரணங்களால் மூடப்படும். பையுவிலிருந்து ஷன்யன் செல்லும் 56 கிலோமீட்டர் பயணம் இன்னும் ஏமாற்றக்கூடியதாக உள்ளது. குதிரைமேல் அமர்ந்து அடர்த்தியான காடுகள், புதர் காடுகள், புல்வெளிகள் மற்றும் மலைப்பாறைகள் வழியாக 5,000 மீட்டர்கள் (16,400 அடிகள்) உயரமான தலோங் (Dalong) மலையைக் கடந்து செல்லவேண்டும். கூடவே இப்பகுதி அநேக வெப்பநிலை மண்டலங்களை உள்ளடக்கியுள்ளது; 51 எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஒரு பயணி இவ்வாறு கூறுகிறார் " நான் பயத்தில் நடுங்கிக்கொண்டு, பட்டணத்திலேயே சிறந்த, செம்பழுப்பு நிறமான குதிரையின்மேல் சீறிப்பாயும் சின்ஷா (Jinsha) நதியிலிருந்து 2,000 மீட்டர்கள் (6,500 அடிகள்) உயரத்தில் செங்குத்தான மலையில் வெட்டப்பட்ட பாதையில் பயணம் செய்தேன்." சின்ஷா நதி சிசுவான் மற்றும் திபெத்தைப் பிரிக்கும் எல்லையாக உள்ளது.

**அடையாளம்:** ஷன்யன் திபெத்தியர்கள் இப்பகுதியில் இவர்கள் அருகில் வாழும் கம்பா திபெத்தியர்களிடத்திலிருந்து கலாச்சாரத்திலும், இனத்திற்குரிய காரியங்களிலும், மொழியிலும் வித்தியாசமானவர்கள். ஷன்யன் திபெத்தியரான தோர்ஜி வங்ஷோங் தங்களுடைய மூதாதையர்களைப்பற்றிக் கூறுகையில் இவ்வாறு கூறுகிறார், 'நாங்கள் யர்லுங் சங்பொ (Yarlung Zangbo) நதியின் மேற்புறத்தில் இந்நாட்களில் ஙாரி மாகாணம் எனப்படும் பகுதியிலிருந்து வந்தவர்கள். நாங்கள் திபெத்தியர்கள்; உள்ளூர் கம்பாக்கள் அல்ல...எங்கள் மூதாதையர்கள் சின்ஷா நதியை வந்தடையும் மட்டும் கிழக்கை நோக்கி நகர்ந்தார்கள். இந்நாள்வரை 40 லிருந்து 50 சந்ததிகள் இங்கேயே வாழ்ந்துவிட்டோம். கி.பி.1950 வரை 20,000 பேர் கொண்ட 18 குலங்கள் இங்கு இருந்தன.' வரலாற்றின்படி இவர்கள் மேற்கிலிருந்து வந்தாலும் இவர்களுடைய இப்போதைய இருப்பிடம் மூதாதையர்களின் இருப்பிடத்திலிருந்து 1000 கிலோமீட்டர்கள் தொலைவிற்கு அப்பால் உள்ளது.

**வரலாறு:** 'இந்தச் சிறு பகுதி, சாம்ராஜ்யத்தின் ஆட்சியைத் தங்களுடைய ஆபத்தான நிலப்பரப்பு மற்றும் மக்களுடைய வீரத்தைக்கொண்டு, 200 வருடங்களுக்கு மேலாக எதிர்த்தது என்றும், இவர்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர, ராஜ சபை அநேக முறை இராணுவத்தை அனுப்பினது என்றும்' சியங் சாம்ராஜ்யத்தின் ஆவணங்கள் கூறுகின்றன.

**மதம்:** பெரும்பாலான ஷன்யன் திபெத்தியர்கள் நிமா (Nyima) புத்தமதப் பிரிவைச் சேர்ந்தவர்கள். 'மற்ற பகுதிகளில் வாழும் மக்களைப்போல இவர்கள் மந்திரம் படிக்க அடிக்கடி லாமாக்களை அழைப்பதில்லை; மாறாகக் குடித்துவிட்டுத் தாங்களே செய்துவிடுகின்றார்கள். முந்தைய காலங்களில் யுத்தத்திற்குச் செல்லும்முன் எல்லா ஆண்களும் ஒன்றாகக்கூடி மாட்டைவெட்டி, குடித்து மந்திரம் படித்தார்கள். குடித்துவிட்டு உறுதிமொழி எடுத்தார்கள். பின்பு ஜெபமாலை அல்லது கூழாங்கற்களைக்கொண்டு யுத்தத்தில் தங்களுடைய அதிர்ஷ்டம் பார்க்க குறிபார்த்தார்கள்.'

**கிறிஸ்துவம்:** ஷன்யன் திபெத்தியர்கள் சுவிசேஷத்தால் முற்றிலும் தொடப்படாதவர்களாகும். புத்த மதத்தைப் பின்பற்றும் இனங்கள் மத்தியில் ஒரு பெரிய சவாலாக இவர்கள் இருந்துவருகின்றார்கள்.




**Population:**
20,000 (2000)
24,600 (2010)
30,300 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Shanyan

**மக்கள்தொகை:** 20,000 in China (2000, P Hattaway)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய,ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய(Tibetic), திபெத்திய (Tibetan), வகைப்படுத்தப்படாத மொழி

**மொழி வழக்குகள்:** 0

**திபெத்திய புத்தமதம்:**100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு :** இல்லை

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்